**செய்தி வெளியீடு எண். 30** **தேதி: 30.04.2026**

**<u>மக்கள் மாளிகை, தமிழ்நாடு – செய்தி வெளியீடு</u>**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அவர்கள், இன்று (30.04.2026) நீலகிரி மாவட்டம், ஊட்டி, லவ்டேல் பகுதியில் அமைந்துள்ள லாரன்ஸ் பள்ளியில் நடைபெற்ற 168-வது நிறுவனர் தின விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.</u>**

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது உரையில், கல்வியின் உண்மையான நோக்கத்தையும், விழாவில் வழங்கப்பட்ட விருதுகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். இவ்விழாவில் வழங்கப்பட்ட விருதுகள், மாணவர்கள் தங்கள் பள்ளிக் காலத்தில் வெளிப்படுத்திய சாதனைகள், திறமைகள் மற்றும் முயற்சிகளுக்கான அங்கீகாரம் என அவர் குறிப்பிட்டார். இச்சாதனைகள் ஆசிரியர்களின் தொடர்ந்த வழிகாட்டுதல் மற்றும் பெற்றோரின் உறுதியான ஆதரவின் காரணமாக சாத்தியமானவை எனவும் அவர் வலியுறுத்தினார்.

கல்வியின் விரிவான பங்கினை எடுத்துரைத்த அவர், கல்வி என்பது வெறும் வேலைவாய்ப்பு பெறுவதற்கான வழிமுறையாக மட்டுமே கருதப்படக் கூடாது என்றார். அது மாணவர்களை சமூகத்திற்கும் நாட்டிற்கும் தங்களுடைய பொறுப்புகளை உணரச் செய்ய வேண்டும் என்றும், தங்கள் கல்வியை நாட்டின்

முன்னேற்றத்திற்கும் சமூக நலனிற்கும் பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், அவர் வேலை பெறுவது ஒரு முக்கிய இலக்காக இருந்தாலும், மாணவர்கள் தங்கள் துறைகளில் முன்னோடிகளாகவும், வேலைவாய்ப்புகளை உருவாக்குபவர்களாகவும் உருவாக வேண்டும் என ஊக்குவித்தார். கல்வியின் உண்மையான சாரம் நல்ல மனிதப்பண்புகளை வளர்த்தெடுத்து, பொறுப்பான மற்றும் கருணையுள்ள குடிமக்களாக உருவாக்குவதில் இருக்கிறது என்றும் வலியுறுத்தினார்.

ஆளுநர் தனது உரையின் இறுதியில், மாணவர்களை நேர்மை, அர்ப்பணிப்பு மற்றும் நாட்டுப்பற்று ஆகிய பண்புகளுடன் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தன்னலமின்றி சேவை செய்யக்கூடிய முன்மாதிரிகளாக உருவாக்குவதே கல்வியின் உயர்ந்த குறிக்கோள் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திரு. தவளா வெங்கட சோமேஸ்வர ராவ், தலைமையாசிரியர் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர் செயலாளர், லாரன்ஸ் பள்ளி, லவ்டேல்; திரு. நிதின் செங்கப்பா, மேலாண்மை இயக்குநர் மற்றும் தனியார் வங்கி பிரிவு தலைவர், ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்; டாக்டர் பவன் குமார் சிங், பேராசிரியர், ஐஐஎம் இந்தூர் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்; திருமதி. ஸ்வேதா பொத்தார், இணை நிறுவனர், எலை

பிளாட்டர் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்; மேலும் பல சிறப்பு விருந்தினர்கள், முக்கிய பிரதிநிதிகள், நிர்வாக குழு உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

.............................................................................................................................................

**மக்கள் மாளிகை, சென்னை-22** **வெளியீடு:**
**தேதி: 30.04.2026** **மக்கள் தொடர்பு அலுவலகம்**